# 62. அபிமானமறுத்தல்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

முதுமறைகள் புகழ்மணியை முதியர்மொழி யொளிர்மணியை
மூடரறி யாமணியை மோன மணியை
மதர்வுகெழு மாவறிவுக் குருமணியைத் திருமணியை
மதிநடன மன்றமிருந் தவிரு மணியை
நிதமணியைக் குமரகுரு தாசனகத் தசைமணியை
நினைப்பவர்க்கு வீடுளதென் றிமிழு மணியை
இதமணியைப் பரசிவசுப் பிரமணிய மதைநினையு
மிதயரடி மலர்களென் னவிர முறவே.

---

1. இமிழ் = ஒலி. "தெரியிமிழ் கொண்டநு மியம்போல்" என்றார் மலைபடுகடாத்தினரும்.

*முதுமறைகள் புகழ்மணியை முதியர் மொழி ஒளிர்மணியை*
*மூடர் அறியாமணியை மோன மணியை*
*மதர்வுகெழு மா அறிவுக் குருமணியைத் திருமணியை*
*மதி நடன மன்றம் இருந்து அவிரு மணியை*
*நிதிமணியைக் குமரகுருதாசன் அகத்து அசைமணியை*
*நினைப்பவர்க்கு வீடு உளது என்று இமிழும் மணியை*
*இதமணியைப் பரசிவ சுப்பிரமணியம் அதை நினையும்*
*இதயர் அடிமலர்கள் என் நவிரம் உறவே.*

பழைமையான வேதங்கள் புகழ்கின்ற மணியை, பெரியோர்தம் மொழியில் ஒளிவீசும் மணியை, மூடர்கள் அறியாத மணியை, மௌன மணியை, அழகு பொருந்திய பேரறிவுக் குருமணியை, அழகிய மணியை, ஞான நடன மன்றத்தில் இருந்து விளங்கும் மணியை, நித்தியமாய் உள்ள மணியை, குமரகுருதாசன் உள்ளத்தில் அசையும் மணியை, நினைப்பவர்க்கு வீடுபேறு உள்ளது என்று ஒலிக்கும் மணியை, இனிய மணியை, மேலான சிவசுப்பிரமணியத்தை நினைக்கும் இருதயம் உடையவர்தம் திருவடி மலர்கள் என்னுடைய தலைமேல் இருக்கட்டும். 1

நேரிசையாசிரியப்பா

**நிலமிசை யாகம நெறியி லேனும்**
**கலைமலி நான்மறைக் கடையி லேனும்**
**இறைநூ லாயவவ் விரண்டினு மேனும்**
**சிறிது படனஞ் செய்தந் நடவை**
**திடப்படா துலக மாயையிற் சிக்குபு**
**விடப்படா தலைவோர் விரதமுள் ளோரைக்**
**கண்ணுறு காலவ ரில்லத் திருந்திடின்**
**கண்ணக லில்லையேன் கருதின ரென்பர்**
**துறவிருந் திடினேன் றுறந்தன ரென்பர்**
**இறையா லயம்புக் கிருந்து வழிபடின்**
**இவர்க்கே னாலய வழிபா டென்பர்**
**அவணமாற் றாவிடி னாற்றிலென் னென்பர்**
**சடைமுண்ட மிலையேற் றவமின் றென்பர்**
**சடைமுண்ட முளவேற் சால்புக்கோ வென்பர்**
**ஓரிடத் திருப்பி னுழிப்பற் றென்பர்**

**பாரிடத் துலாவிற் பசுவலை யென்பர்**
**உண்டுடுத் திடினமை யொத்தவ ரென்பர்**
**உண்டுடுக் காவிடி னுஞற்றிலென் னென்பர்**
**பேசி விளக்கிடிற் பிதற்றலே னென்பர்**
**பேசா திருந்திடிற் பிறர்க்கென் னென்பர்**
**விழித்து நோக்கிடின் வெளிமுக மென்பர்**
**விழியா திருந்திடின் விழிக்கிலென் னென்பர்**
**அற்புத மிலதே லருளின் றென்பர்**
**அற்புத முளதே லணிவித்தை யென்பர்**
**ஆதலின் மனனே யவனியர் பலவா**
**றோதிழி வுக்குநீ யுள்ளுலை வேதும்**
**உறலொழிந் தெம்மா னுரைத்தசன் மார்க்க**
**முறையி லுனக்கெது பிடித்தமு முயல்வும்**
**உள்ளதோ வவ்வா றுற்றெங் கடவுளாய்**
**உள்ள குகேசனை யுலப்பி லுண்மையை**
**அகண்ட பூரண வருட்பெருஞ் சோதியை**
**அகண்ட பூரண வானந்த வாரியைச்**
**சொல்லற நிற்குந் தூய வெளியைச்**
**சொல்லின் மதுரஞ் சொரியருட் கனியை**
**நினைக்கி னினைந்து நிகழ்ந்து பற்றுபு**
**நினையா தேனீங் கிடுமோ ரியற்கையைத்**
**தருவரு ணகிரி சிந்தித்த தேவை**
**உருவரு வின்றி யொளியிரு ளின்றிச்**
**சுத்தசித் தாகச் சூழ்ந்து**
**சத்திய முத்தி தானடை வாயே.**

*நிலமிசை ஆகம நெறியில் ஏனும்*
*கலைமலி நான்மறைக் கடையில் ஏனும்*
*இறை நூல் ஆய அவ் இரண்டினும் ஏனும்*
*சிறிது படனம் செய்து அந்நடவை*
*திடப்படாது உலக மாயையில் சிக்குபு*
*விடப்படாது அலைவோர் விரதம் உள்ளோரைக்*
*கண்ணுறு கால் அவர் இல்லத்து இருந்திடின்*
*கண்ணகல் இல்லை ஏன் கருதினர் என்பர்*

2. **உலப்பு** = சாவு.

துறவு இருந்திடின் ஏன் துறந்தனர் என்பர்
இறை ஆலயம் புக்கு இருந்து வழிபடின்
இவர்க்கு ஏன் ஆலய வழிபாடு என்பர்
அவணம் ஆற்றாவிடின் ஆற்றில்என் என்பர்
சடை முண்டம் இலையேல் தவம் இன்று என்பர்
சடை முண்டம் உளவேல் சால்புக்கோ என்பர்
ஓரிடத்துஇருப்பின் உழிப்பற்று என்பர்
பாரிடத்து உலாவின் பசுவலை என்பர்
உண்டு உடுத்திடின் நமை ஒத்தவர் என்பர்
உண்டு உடுக்காவிடின் உஞற்றில் என் என்பர்
பேசி விளக்கிடில் பிதற்றல் ஏன் என்பர்
பேசாது இருந்திடில் பிறர்க்கு என் என்பர்
விழித்து நோக்கிடின் வெளிமுகம் என்பர்
விழியாது இருந்திடின் விழிக்கில் என் என்பர்
அற்புதம் இலதேல் அருள் இன்று என்பர்
அற்புதம் உளதேல் அணிவித்தை என்பர்
ஆதலின் மனனே அவனியர் பலவாறு
ஓது இழிவுக்கு நீ உள் உலைவு ஏதும்
உறல் ஒழிந்து எம்மான் உரைத்த சன் மார்க்க
முறையில் உனக்கு எது பிடித்தமும் முயல்வும்
உள்ளதோ அவ்வாறு உற்று எம் கடவுளாய்
உள்ள குகேசனை உலப்பில் உண்மையை
அகண்ட பூரண அருட்பெருஞ் சோதியை
அகண்ட பூரண ஆனந்த வாரியைச்
சொல் அற நிற்கும் தூய வெளியைச்
சொல்லின் மதுரம் சொரி அருள்கனியை
நினைக்கில் நினைந்து நிகழ்ந்து பற்றுபு
நினையாதேன் ஈங்கு இடும்ஓர் இயற்கையைத்
திரு அருணகிரி சிந்தித்த தேவை
உருஅரு இன்றி ஒளி இருள் இன்றிச்
சுத்த சித்தாகச் சூழ்ந்து
சத்திய முத்தி தான் அடைவாயே.

இம்மண்ணுலகில் ஆகமம் கூறும் நெறியிலேனும், கலைகள் மிகுந்த நான்கு வேதங்களின் முடிவு எனக் கூறப்படும் வேதாந்தத்திலேனும், இறைவன் அளித்தருளிய அந்த இரண்டினுமேனும் சிறிதளவு மனப்பாடம் செய்து, அதில் கூறியுள்ள நெறியை உறுதியாகப் பற்றிக் கொள்ளாமல், உலக மாயையில்

சிக்குண்டு அம்மாயையை விடமுடியாது அலைவோர் தவம் செய்வோரைக் காணும்போது, அவர் தன் வீட்டில் இருந்திடின் ஏன் வீட்டை விட்டுச் செல்லாமல் ஏன் தவத்தைக் கருதினர் என்பர்; துறவறம் இருந்தால் ஏன் துறந்தனர் என்பர்; கடவுள் திருக்கோயிற்குச் சென்று வழிபாடு செய்தால் இவர்க்கு ஏன் கோயில் வழிபாடு என்பர். அவ்வாறு செய்யாது போனால், ஏன் செய்யவில்லை என்பர். சடையோ அல்லது மொட்டையோ இல்லை என்றால் தவம் இல்லை என்பர்; சடை அல்லது மொட்டை இருந்தால் வீண் பெருமைக்கோ என்பர். ஓர் இடத்தில் வாழ்ந்தால் இடப்பற்று என்பர்; உலகில் பல இடங்களுக்குச் சென்று வந்தால் உயிர்களின் வலையில் சிக்கியவர் என்பர். உண்டு உடுத்திடின் இவரும் நம்மைப் போன்றவர்தானே என்பர்; உண்டு உடுக்காவிடின் அவற்றைத் தேடிக்கொள்ளும் முயற்சி இல்லை என்பர். பேசி ஒரு கருத்தை விளக்கிடின் பிதற்றல் ஏன் என்பர்; பேசாது இருந்தால் மற்றவருக்கு என்ன பயன்? என்பர்; கண்ணைத் திறந்து பார்த்திடில் வெளிமுகமாகச் செல்கின்றது பார்வை என்பர்; கண்ணைத் திறக்காவிடில் திறந்தால் என்ன என்று கேட்பர். அற்புதங்கள் செய்யாவிடில் இவருக்கு அருள் இல்லை என்று கூறுவர்; அற்புதங்கள் இருக்குமானால் அவை அழகிய கண்கட்டு வித்தை என்பர். ஆதலால் ஏ மனமே! நீ இந்த உலகத்தார் பலவாறாகக் கூறும் இழிவுகளுக்கு உள்ளே வருந்துதலை ஒழித்துவிடு. எம்பெருமான் உரைத்த சன்மார்க்கத்தில் எது உனக்குப் பிடித்ததோ முயற்சி உள்ளதோ அவ்வவ்வாறு செய். எம் கடவுளாகிய குகேசனைச் மரணம் இல்லாத உண்மையை, அகண்ட பூரண அருட்பெருஞ்சோதியை, அகண்ட பூரண ஆனந்தக் கடலை, சொல் அற்று நிற்கும் தூயவெளியை, சொல்லின் இனிமை சொரியும் அருட்கனியை நினைக்கில் நினைந்து நிகழ்ந்து பற்றி, நினையாதவன் இங்கு செய்யும் ஓர் இயற்கையைத் திருஅருணகிரிநாதர் நினைத்த கடவுளை, உருவம் அருவம் இல்லாமலும், ஒளியும் இருளும் இல்லாமலும் சுத்த அறிவாக எண்ணிச் சத்தியமாயுள்ள முத்தியை அடைவாயாக. 2